# பழந்தமிழர் இலக்கியங்களில் காணப்படும் மக்கள் நம்பிக்கைகள், சடங்கு முறைகள் மற்றும் அவை சார்ந்த வழிபாட்டு முறைகள்

*வெ. திருகுமரன்*
முனைவர் பட்ட ஆய்வாளர், நிகழ்கலைத்துறை
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி

*முனைவர் மு. சுப்பையா*
உதவிப் பேராசிரியர், நிகழ்கலைத்துறை
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**மலர்: 4**

**இதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

## *முன்னுரை*

*பலியிடுதல், கல்நடுதல், சடங்குகள் பல செய்து வழிபடுதல், இனக்குழுவினர் ஒன்றிணைந்து ஆடுதல், பாடுதல் போன்ற பல நிகழ்த்து முறைகளை நிகழ்த்திய பதிவுகளைக் காண்கிறோம். கோல்களின் நகர்வுகளைக் கொண்டு நல்லவை நடக்கும், அல்லவை நடக்கும் எனக் கணித்துள்ளனர். இசைக்கருவிகளை முழக்கிய நிலையில் ஆடியுள்ளனர், பாடியுள்ளனர். தான் வழிபடும் தெய்வங்கள், நிகழ்த்திடும் சங்ககால மக்கள் நம்பிக்கை கொண்டு மேற்கண்ட சடங்குகளுடன் கூடிய நிகழ்த்து முறைகளைச் செய்து வந்துள்ளனர். சடங்கு நிறைவேற்றுதலின் ஊடாக ஆடலும் பாடலும் முதன்மையான பங்குகளை வகித்துள்ளன எனும் கருத்து கவனிக்க வேண்டியதாக அமைகின்றது. நம்மிடையே பொதிந்து போய் கிடக்கின்ற இவற்றை வெளிக்கொணர்வது என்ற நோக்கில் இந்த கட்டுரை முற்படுகின்றது.*

*ஆடலும் பாடலும், சடங்கு நிகழ்த்து முறைகளிலும் நம்பிக்கை முறைகளிலும் முதன்மை பங்குகளை வகிக்கின்றன. சங்ககால மக்களின் வாழ்வில் ஆடல், பாடல், இசைக்கருவிகள், கலைஞர்கள், குருதியும் தசையும் போல பிரிக்க முடியாத நிலைகளில் உறவு கொண்டிருப்பதை காண முடிகின்றது.*

**பண்டைய இலக்கியங்களில் மக்கள் நம்பிக்கைகளும் அது சார்ந்த சடங்குகளும்**

இறந்தோரை வணங்கிப் போற்றினால் எண்ணியது நிறைவேறும் என நம்பிக்கை கொண்டு இருந்தனர். நெய்தல் நிலமக்கள் சுறா மீனின் முதுகெலும்பை நட்டு வைத்து, அதனை வலம் வந்து ஆடிப்பாடி சடங்கை நிறைவேற்றியுள்ளனர். இவ்வாறு சடங்கு செய்து வழிபட்டால் மீன் வளம் பெருகும் என்றும் கடல்சார் வாழ்க்கை செழிக்கும் என்றும் நெய்தல் நிலப்பரதவர் மக்கள் நம்பிக்கைக் கொண்டு நிகழ்த்தியுள்ளனர்.

வேலன் வெறியாடல் நிகழ்த்தும்போது மண் தரையை மெழுகி கோலமிட்டு, பலி செய்யக்கூடிய அரிசி, இலை, தழை போன்றவற்றை படையல் பொருள்களாக்கி சடங்கு செய்து வழிபாடுகள் செய்துள்ளனர்.

சடங்குகளை நிகழ்த்தினால் வாழ்வு சிறக்கும் என நம்பிக்கை கொண்டு வாழ்ந்துள்ளனர். குறிப்பிட்ட சடங்குகளை நிகழ்த்தும்போது குறிப்பிட்ட இன மக்கள் ஆடியுள்ளனர், பாடியுள்ளனர்.

**நம்பிக்கைகள்**

நம்பிக்கை என்பது சமூகம் வளர்ந்து மாறிய பிறகும் மனித சமூகத்தில் இது நாட்டுப்புற நம்பிக்கையாக உள்ளது. பல்லி ஒலி வழி நம்பிக்கை கொண்டு செயற்பட்ட குறிப்புக்களைச் சங்க இலக்கியம் சுட்டுகிறது. அதுபோல வானில் உதிக்கும் நட்சத்திரத்தைக் கண்டும் நம்பிக்கை வாழ்வு வாழ்ந்துள்ளனர்.

**எடுத்துகாட்டாக:**

> **“வசை இல் புகழ் வயங்குவெண்மீன்**
> **திசைதிரிந்துதெற்குஏகினும்**
> **புள் தேம்பப் புயல் மாறி**
> **வான் பொய்ப்பினும் தான் பொய்யா”**
>
> ***(பட்டினப்பாலை 1-5)***

வெண்மின் திசைமாறித் தோறிள் தெற்கு ஏகினால் பஞ்சம் விளையும். மழை இருக்காது என மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

> **“இனைநலம் உடையகானம் சென்றோர்**
> **புனைநலம் வாட்டுநர் அல்லர்: மனைவயின்**
> **பல்லியும் பாங்குஓத்து இசைத்தன:**
> **நல்எழில் உண் கணும் ஆடுமால் இடனே”.**
>
> ***(கலி. 11: 19-22)***

எனும் கலித்தொகைப் பாடல் பல்லி சகுனம் பார்த்த நம்பிக்கையைப் பதிவு செய்கிறது. சூழலியல், வாழ்க்கை முறைகளைச் சங்கப் பாடல்கள் பதிவு செய்துள்ளன.

**சடங்குகளும் வழிபாடுகளும்**

நம்பிக்கை வழி தோன்றலே சடங்கு. நம்பிக்கையின் கடைசி கட்டமாக சடங்கு நிகழ்த்தப்படுகிறது. நம்பிக்கை என்பது கருத்துவடிவம். அதன் செயல்பாடு சடங்கு. நம்பிக்கை இன்னும் உச்சக்கட்ட நிலையில் செயல் வடிவம் கொள்கிறது. சடங்குகள் மரபுவழிபட்ட நம்பிக்கையும் புறச்செயல்களையும் கொண்டு விளங்குகின்றன. இச்சடங்குகள் வழி சமூகத்தின் பண்பாடு அறியமுடிகிறது.

குலதெய்வம், ஊர்ப் பொதுதெய்வம் ஆகிய இரண்டு வழிபாடுகளிலும் இடம்பெறும் சடங்குகளைப் பொதுவான வழிபாட்டுச் சடங்குகள் எனும் வகையில் பிரிக்கலாம். அவ்வகையில் பொங்கலிடுதல், தலைமழித்தல், பூக்குழியில் இறங்குதல், பலியிடுதல், சாமியாடுதல் ஆகியன இரண்டு வழிபாடுகளிலும் இடம் பெறுகின்றன. சாமி வெறிகொண்டு ஆடும் பெண்கள் இசைக்கருவிகள் முழங்க வீதியில் ஆடி வருகின்றனர். இச்சிறுதெய்வ வழிபாட்டு மக்களின் ஆராவார ஊர்வலத்தினை மாட மாளிகைகளில் தங்கியுள்ள இல்லறத்தார் அவர் தம் சாளரங்களின் வழியே கைகளை நீட்டி சாமியாடி வரும் சிறுதெய்வ வழிபாட்டாளர்களை வணங்குகின்ற காட்சி இடம் பெறுகின்றனது.

**"வெண்கூதாளத்துத் தண்புங் கோதையர்**
**சினைச் சுறவின் கோடுநட்டு**
**மனைச் சேர்த்திய வல் அணங்கினான்**
**மடல்தாழை மலர்மலைந்தும்**
**பிணர்ப் பெண்ணைப் பிழி மகிழ்ந்தும்**
**புன்தலை இரும்பரதவர்**
**பைந்தழை மாகேளிரொடு**
**பாயிரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது**
**உவவுமடிந்து உண்டு ஆடியும்"**

**-பட்டினப்பாலை 85-93**

## நடுகல் வழிபாட்டு சடங்குகள்

உயிர் நீத்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் சிற்றரசன் ஆவான். இவன் போர்க்களத்தில் உயிர் நீத்தான். அவனது நினைவாக நடுகல் நடப்பட்டது. நடப்பட்ட இடத்தில் மயில் தோகைகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. மதுபானத்தைப் படைத்தனர். துடி என்னும் இருபுற முழவினை இசைத்து ஒலி எழுப்புகின்றனர். ஆட்டுக்குட்டியை அறுத்துப் பலியிடுகின்றனர். நடுகல் வழிபாட்டு சடங்கு நடந்தேறியுள்ளதாக சங்கப் பாடல் குறிப்பிடுகின்றது.

**"நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்**
**முனையாத் துந்து முரம்பின் வீழ்த்த**
**வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்**
**வல்லான் பதுக்கைக் கடவுட் பேண்மார்**
**நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்**
**போர்க்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம்"**

**-அகம். 35:4-10**

## குலதெய்வ வழிபாடு

**"சினைச் சுறவின் கோடு நட்டு**
**மனைச் சேர்த்திய வல் அணங்கினான்**
**மடல் தாழை மலர் மலைந்தும்,**
**புன்தலை இரும்பரதவர்**
**பைந்தழை மா மகளிரொடு**
**பாய் இரும் பனிக் கடல் வேட்டம் செல்லாது**
**உலவு மடிந்து உண்டு ஆடியும்"**

**- பட்டினப்பாலை. 86-93**

சுறாமீனின் வெண்முதுகெலும்பை நெடுமரம் என கடல் மணலில் நட்டுவைத்து சுறா விற்கும் பரதவ இனமக்கள் அனைவரும் சடங்கு நிகழ்த்துகின்றனர். வலம் வந்து வழிபடுகின்றனர். இன்றளவும் நாட்டுப்புற மக்கள் தம் குலதெய்வங்களை வழிபட ஆடு கோழி, மாடு என வெட்டி அவற்றின் சதை எலும்புகளைப் படையிலிட்டுச் சமைத்து உண்டு சடங்கு நிறைவேற்றி வழிபடுகின்ற வழக்கினைப் பரவலாகக் காண்கிறோம்.

**"வளி நுழையும் வாய் பொருந்தி**
**ஓங்கு வரை மருங்கின் நுண் தாது உறைக்கும்**
**காந்தள் அத்துடுப்பின் கவிகுலை அன்ன,**
**செறி தொடிமுன்கை கூப்பி செவ்வேள்**
**வெறிஆடு மகளிரொடு செறியத்தாஅய்**
**குழல் அகவ, யாழ் முரல**
**முழவு அதிர,முரசு இயம்ப,**
**விழவு அறா வியல் ஆவணத்து"**

**- பட்டினப்பாலை 151 - 158**

ஒரு பெண் சாமி ஆட்டம் ஆடி தெருவில் கொட்டுமேளம் முழங்க செவ்வேள் எனக் கதறிக்கொண்டு சுற்றத்தாரும் மற்றோரும் உடன் வருகின்றனர். யாழ், முழவு, முரசு, குழல் போன்ற இசைக்கருவிகள் முழங்கி வருகின்றன. சாமியாடும் அப்பெண் காந்தள் மலர் சூடியுள்ளாள். இக்குழாம் வீதியின் இரு மருங்கிலும் மக்கள் கூடி வேடிக்கை பார்க்கத்தக்க சாமியாட்டம் ஆடிச் செல்கின்றனர். குலசாமியைக் கொண்டாடி வீதி வலம் செய்கின்ற மக்கள் இவர் வேடிக்கைப் பார்க்கும் மக்கள் ஓங்கி வளர்ந்த மாடமாளிகையும் வீடுளும் கொண்ட வணிக மக்கள் ஆவர். இவர்கள் வணங்கும் தெய்வம் வேறு.

## சடங்கு முறைகள்

**"மலை வான் கொள்கெ உயர்பலி தூஉய்**
**மரியான்னு மழைக்கு உயர்கெனக்**
**கடவுள் பேணிய குறவர் மாக்கள்**
**பெயல் கண் மாறிய உவகையர்"**

**(புறம். 143: 1-4)**

மழை வேண்டி நிகழ்த்தும் வழிபாட்டினை எண்ணிப் பார்க்கலாம். குறவர்கள் கூடிப் பலத்த ஓசை எழுப்பி,

**"குன்றக் குறவள் ஆர்ப்பின் எழிலி**
**நுண்பல் அழிதுளி பொழியும் நாட"**
**(ஐங்கு. 251: 1-2)**

ஒருவகைச் சடங்கு செய்து மழை வேண்டுகின்றனர்.

**"புகை பு அவி ஆராதனை அழல் பல ஏற்றி**
**.....................வையைவரவு"** (பரி. 6: 11-13)

புகை மூட்டி, பூத்தூவி, ஆராதனை செய்யும் சங்ககால முறை இன்றளவும் சிறுதெய்வம் மற்றும் பெருந்தெய்வச் சடங்குகளின்போது நாம் காணும் நடைமுறைகளாம்.

**பலியிடுதல்**

பலியிடுதலால் நன்மை உண்டாகும் எனக் கருதி அச்சடங்கைச் செய்தல் இனக்குழுச் சமயத்தின் முக்கிய நம்பிக்கை ஆகும். இதனால் பலியிடுதலை முக்கிய சடங்காகக் கொண்டுள்ளனர். பலியிடுதலில் இரண்டு வகை காணப்படுகின்றது. உயிர்பலியிடுதல், பிறபொருட்களை பலியிடுதல். இவற்றில் உயிர் பலியிடுதல் நரபலி என வழங்கப்படுகின்றது. இவ்வகை பலிகள் சங்ககாலத்தில் பரவலாகக் காணப்பட்டதைக் குறித்து இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன.

சிலப்பதிகாரத்தில் மன்னனுக்கு வந்த துன்பம் நீங்குவதற்காகப் போர்வீரர்கள் தங்களைத் தாங்களே பலியிட்டுக் கொண்டதற்கான குறிப்பு காணப்படுகிறது. கலிங்கத்துப் பரணியில் சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த கொற்றவைக் கோயிலில் தங்களைப் பலியிட்டுக் கொண்ட வீரர்களின் தலைகள் அங்குள்ள மரக்கிளையில் தொங்கும் காட்சியாகக் காட்டப்பட்டுள்ளன.

கி.பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் காலத்துக் குடைவரைக் கோயில்களில் துர்கை சிற்பங்களின் பாதத்தின் அடியில் வீரனொருவன் தலையை அரிந்து கொற்றவைக்குப் படைப்பது போன்ற சிற்பங்கள் செய்யப்பட்டிருப்பது நரபலிக்குச் சான்று என்று. வேதாசலம் கூறுகிறார்.

**"நடுகல் பீலி சூட்டி, துடிப்படுத்து**
**தோப்பிக் கள்ளோடுதுரூ உப்பலி கொடுக்கும்**
**போக்கு அருங்கவலைய புலவுநாறு ஆருஞ்சுரம்"**
**-அகம். 35.**

இப்பாடலில் தலைவன் தலைவி உடன் போக்கில் சென்றனர். அது கண்ட தாய் தெய்வத்திடம் வேண்டியதானது. இப்பாடலடிகள் மகள் உடன் போக்கிய வழியின் நிலையைக் கூறி தெய்வத்திடம் வேண்டுகிறாள். ஆநிரைகளைக் கவர்ந்த வெட்சிவீரர்களை மேட்டு நிலத்தில் வீழ்த்தி, அங்கு ஒரு கரந்தை வீரனுக்கு நடப்பட்ட வீரகல்லுக்கு மயிற்பீலி சூட்டி, ஆட்டுக் குட்டியைப் பலிகொடுத்து புலவு மணம் வீசும் பாலைவழியில் சென்றதாகக் கூறி முறையிடுகிறாள். இந்தப் பாடலடிகள் மூலம் போரில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் வெற்றியைக் கொண்டாட பலியிடும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் என அறியப்படுகின்றது.

**"பொறிவரி இன வண்டுஊதலகழியும்**
**உயர்பலி பெறுஉம் உருகெழுதெய்வம்**
**புனை இருங்கதுப்பின் நீகடுத் தோள் வயின்"**
**-அகம். 166.**

பரத்தையோடு நீராடிய தலைவனைக் கண்ட தலைவி ஊடல் கொள்கிறாள். பரத்தையோடு நீராடலை சூளுரைத்து மறுத்த தலைவனைப் பரத்தை இகழ்ந்து கூறுகிறாள். அவன் சூளுரைத்து, நான் பரத்தையுடன் புனலாடியது உண்மையாயின் உயர்ந்த பலிகளை ஏற்கும் அச்சம்தரும் தெய்வம் என்னை வருத்துவதாகக் கூறி, தன் மனைவியைத் தெளிய வைத்ததாகக் கூறுகிறாள். இப்பாடலடிகள் மூலம் தெய்வ நம்பிக்கையும் பலியிடும் வழக்கமும் அத்தெய்வத்தின் தோற்றத்தை

"உயர்பலி பெறூஉம் உருகெழ தெய்வம்" என்று அச்சம் தரும் தோற்றம் கொண்டதாக அறியப்படுகிறது. அச்சம் தரும் தெய்வம் தவறு செய்தால் தண்டிக்கும் எனும் அச்சத்தினால் வாழ்க்கையை வாழ்வியல் நெறியில் கொண்டு சென்றமை காணலாகிறது. அத்தெய்வத்திற்குப் பலியிட்டால் வாழ்வில் நல்லது நடக்கும் என நம்பிக்கை கொண்டமை அறியப்படுகிறது.

### நடுகல்லுக்கு நாட்பலி

**"உயர்பதுக்கு இவர்ந்தததர்கொடுஅதிரல்
நெடுநிலைநடுகல் நாட்பலிக் கூட்டும்"**
**-அகம். 289.**

இப்பாடலடிகள் பொருள் வரைபிரிவு கொள்ளும்தலைவன்தலைவியை நினைத்து தன் நெஞ்சிற்கு தானே கூறியதாக பொருள் கொள்ள அமைந்துள்ளன. தலைவன் கடந்து செல்லும் பாலை நிலத்தைப் பற்றி கூறும் அடிகள். கள்வர்களால் இறந்து பட்ட வழிப்போக்கர்கள் உடலின் மேல் இருக்கும் கற்குவியலில் காட்டு மல்லிகை ஏறிப் படரும். அம்மல்லிகையினைக் கொண்டு விடியற்காலையில் பலியிடுவர். விடியற்காலை பலியே நாட்பலி எனப்படும். இப்பாடலடிகளின் மூலம் நடுகல்லிற்கு நாட்பலி வழங்கப்பட்டது அறியப்படுகிறது. நடுகல் வழிபாட்டில் மயிற்பீலியும் அதிரல் போன்ற மலர்கொண்டு வழிபாடு நடத்தப்படுவது நோக்கத்தக்கதாகிறது.

**"ஊர்நனி யிறந்த பார்முதிர் பரந்தலை
ஓங்குநிலை வேங்கை ஒளிளிணர் நிறுவிப்
போந்தையந் தோட்டில் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படைலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் தோன்றல்"**
**-புறம். 265:1-5**

### துணைநூல் பட்டியல்

1. தமிழ் வீர நிலைக்கவிதை, கைலாசபதி, மொழிபெயர்ப்பாளர் கு.வே. பாலசுப்பிரமணியன், குமரன் பதிப்பகம் 2006.
2. பண்டைத்தமிழ் அரங்கு, சிவத்தம்பியின் வகிபாகம், மு.இராமசாமி,செப்டம்பர் - 2012.
3. கலைக்களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம்.
4. மயிலை. சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள். நாம் தமிழர் பதிப்பகம்.
5. ஆலிஸ் (உ.ஆ.), பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
6. ஞானாகுலேந்திரன், பழந்தமிழர் ஆடலில் இசை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990.
7. ஜோதிராணி.க.அ, தமிழர் பண்பாட்டுத் தளத்தில் சடங்குகள், தன்னனானே, சென்னை 2004.
8. அகநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை 2007.